செய்தி வெளியீடு எண்: 259 நாள்: 07.04.2020

## செய்தி வெளியீடு

### மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கொரோனா நோய் தடுப்புக்கான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து உற்பத்தியை தமிழ்நாட்டில் மேற்கொள்ள ஊக்குவிக்கும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

உலகத் தொற்று நோயான கொரோனா வைரஸ் நோய் பரவலை தடுக்க தமிழ்நாடு அரசு பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக கொரோனா நோய் தடுப்புக்கான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகளின் உற்பத்தியை தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் மேற்கொள்ள ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு புதிய சலுகைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்தார். அதன்படி, தொழில் துறை அரசாணை எண்.113, தொழில் (எம்.ஐ.பி1) துறை, நாள்: 02.04.2020 ன்படி சலுகைகளை பெறுவதற்கான வழிமுறைகள் வெளியிடப்பட்டன.

உள் நுழைவு செயற்கை சுவாசக் கருவிகள் (Invasive Ventilators), N95 முகக் கவசங்கள், கொரோனா நோய் தடுப்புக்கான வைரஸ் எதிர்ப்பு மற்றும் மலேரியா எதிர்ப்பு மருந்துகள், (Anti Viral and Anti Malarial drugs used to treat COVID 19), அசித்ரோமைசின், ஹைட்ராக்ஸி குளோரோகுயின் மற்றும் வைட்டமின்–சி மாத்திரைகள், ICMR அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட RT-PCR வகை கொரோனா பரிசோதனை உபகரணங்கள்(Test Kits), தனி நபர் பாதுகாப்பு கவச உடை (Personal Protection Equipments as per applicable national standards), பல்வகை பண்பளவு கணிணித் திரைகள் (Multi Parameter ICU Monitors) ஆகியவற்றை உற்பத்தி செய்ய சிறப்பு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீஹெல்த் கேர், இமேஜிங் புராடக்ட்ஸ் (இந்தியா) லிமிடெட், வீனஸ், ஸ்ரீராஜராஜேஸ்வரி லைப் கேர், ஏர் லிக்விட் உள்ளிட்ட பல நிறுவனங்களும் மேற்படி பொருட்களை உற்பத்தி செய்வதற்கான கருத்துருவை அனுப்பியுள்ளனர். இதில் ஸ்ரீ ஹெல்த் கேர் நிறுவனம் கோரியபடி தண்டரை சிட்கோ பூங்காவில் உடனடியாக நிலம் வழங்கப்படுகிறது.

இச்சலுகையை பெற விரும்பும் நிறுவனங்கள் அரசு அனுமதிக்காக காத்திருக்க வேண்டியதில்லை. உடனடியாக பணிகளை துவக்கலாம். தங்களுடைய உற்பத்தியை துவக்கிய பின்னர் அரசுக்கு தெரிவித்தால் போதுமானது.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடமிருந்து கொரோனா நோய் தடுப்புக்கான தனி நபர் பாதுகாப்பு உடைகள், முகக் கவசங்கள், மருத்துவ உபகரணங்கள், மருந்து பொருட்கள் உள்ளிட்டவற்றை தமிழ்நாடு அரசும் பிற மாநில அமைப்புகளும் நிறுவனங்களும் தமது தேவைக்கேற்ப கொள்முதல் செய்ய உதவிடும் பொருட்டு மேற்படி உற்பத்தியாளர்களின் விரிவான பட்டியலை தொழில் வணிக ஆணையரகம் தயார் செய்து வருகிறது.

அதன்படி உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் https://www.msmeonline.tn.gov.in/ என்ற இணையதளத்தில் தங்கள் விவரங்களை பதிவு செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 103 உற்பத்தியாளர்கள் தங்களுடைய விவரங்களை பதிவு செய்துள்ளனர். இங்கு பதிவு செய்வது அரசு கொள்முதல் செய்வதற்கான உத்திரவாதம் அல்ல; மேற்படி நிறுவனங்களின் விவரங்களை சேகரித்து தேவைப்படும் அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு மட்டுமே. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தமது தேவையைப் பொறுத்து அவ்வப்போது தாமாகவே மேற்படி உற்பத்தியாளர்களை தொடர்பு கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**